**16.04.2025**

**C.C. No. 154/2022**

**ம.சா. 1 . சண்முகம்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.5 ஆவணத்தை வாதுரைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட காலத்தில் மீண்டும் மனு செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் மேற்படி ஆவணம் என்னிடம் தான் இருந்தது என்றால் சரிதான். நான் பி.காம் வரை படித்துள்ளேன். மேற்படி ம.சா.ஆ.5 ஆவணத்தில் வருவாய் முத்திரை வில்லை தலைகீழாக ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள முன்பக்கம் ரேகை தொடர்பின்றி இடைவெளி உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எழுதியதுமான சாட்சியுமான என்ற இடத்தில் சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள எதிரியின் கையொப்பமும், வருவாய் முத்திரை மீது மற்றும் அதன் அடியில் கண்டுள்ள எதிரியின் கையொப்பங்களுக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை. எனக்கு ஒன்றாகத்தான் தெரிகிறது. மேற்படி கையொப்பங்கள் வித்தியாசப்படுகிறது என்றாலும் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கையொப்பங்கள் எதிரியால் செய்யப்படவில்லையென்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் உள்ள கைரேகை எதிரியின் கைரேகை இல்லையென்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 கடனுறுதிச்சீட்டில் உள்ள விவரங்கள் எதிரியால் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் பூர்த்தி செய்த கடனுறுதிச்சீட்டை எடுத்து வந்து என்முன்னால் கையொப்பம் செய்து கொடுத்தார். கடனுறுதிச்சீட்டை யார் எழுதினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்த 2வது சாட்சி உயிருடன் இல்லை. ம.சா.ஆ.5 ஆவணம் இவ்வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ம.சா.ஆ.5 ஆவணத்தில் எதிரியோ, சாட்சியோ என்முன்னால் கையொப்பமும், கைரேகையும் செய்யவில்லையென்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி